# ஒன்றாக வளர்வது மிகவும் சிறந்தது




## 4.6 தேவனுடைய வார்த்தையால் வாழுங்கள்

**வேத வசனம்:** **என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான். நீரோட்டம் அதின்மேல் மோதினவுடனே அது விழுந்தது. விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.**

*லூக்கா 6:49*

**அறிக்கை:** **தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிந்து தேவனுக்குப் பிரியமாயிருப்போம்**



**சத்தியம்:** என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான். நானும் அவனில் அன்பாயிருந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்று கர்த்தராகிய இயேசு சொன்னார்.

### வேதப் பகுதி: நீதிமொழிகள் 2:1-6

**பாடம்** **1. தேவனுடைய வார்த்தையில் ஜீவனும் வல்லமையும் இருக்கிறது:** முந்தையப் பாடத்தில் பேதுரு ஒரு மனிதனின் காதை வெட்டினான் என்று பார்த்தோம். வேதம் போதிப்பது என்னவென்றால் தேவனுடைய வார்த்தை செயல் வலிமை மிக்கதும், இருபக்கமும் கருக்குள்ள பட்டயமுமாக இருந்து எந்த ஆவிக்குள்ளும் ஆத்துமாவுக்குள்ளும் ஊடுருவும் வல்லமை உடையது. கர்த்தர் இயேசு சொன்னார், "நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது". தேவனுடைய வார்த்தைக்கு உயிரும் வல்லமையும் உண்டு. அது எந்த பாறையையும் உடைக்கும் வல்லமை கொண்ட சம்மட்டி போன்றது. உலகில் உள்ள அனைத்தும் தேவனுடைய வாயிலிருந்து வந்த அந்த வார்த்தையால் உருவானவைகளே. (எபிரெயர் 4:12, யோவான் 1:3, 6:63)

**2. தேவனுடைய வார்த்தை வாழ்க்கையை மாற்றக்கூடியது:** பொதுவான பழமொழி ஒன்றைக் குறிப்பிடுகிறேன். சிறுத்தை தன் உடலில் உள்ள புள்ளிகளை எப்போதும் மாற்றிக்கொள்ளாது. மனிதனுடைய குணங்கள் மாறாததாக இருப்பினும், தேவனுடைய வார்த்தைக்கு அதனை மாற்றும் வல்லமை உண்டு. தேவன் தமது வார்த்தையை நமது இருதயங்களில் எழுத விரும்புகிறார். அதனால் நாம் பிறருடைய உதவிகள் இன்றி தேவனிடமிருந்தே அவரை நன்கு அறிந்து கொள்ளுவோம். தேவனுடைய அன்பை, சந்தோஷத்தை, சமாதானத்தை , நீடிய பொறுமையை, தயவை, நற்குணத்தை , விசுவாசத்தை , சாந்தத்தை , இச்சை அடக்கத்தை அறிந்துகொண்டு, அவரைப்போல மாறிவிடுவோம். கர்த்தருடைய வார்த்தை பேதைகளையும் ஞானிகளாக்கும். (எபிரெயர் 8:10,11, சங்கீதம் 19:7, நீதிமொழிகள் 2:6)

**3. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எப்போதும் நிலைத்திருக்கும்:** யோவான் 1:1 தெளிவாகச் சொல்லுகிறது, "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது". ஆகையால் இயேசு கிறிஸ்துவே அந்த நித்திய தேவனுடைய வார்த்தை என்பதை நாம் விளங்கிக்கொள்ளலாம். நித்தியமன சத்தியத்தின் நிறைவு அவரே. உலகில் உள்ள அனைத்தும் மாறக்கூடியது. ஆனால் தேவனுடைய சத்தியம் என்றும் மாறாதது. வேதாகம அறிஞர்கள் வேதப்புத்தகத்திலிருந்து 7000 வாக்குத்தத்தங்களை கண்டறிந்திருக்கிறார்கள். மனிதர்கள் நம்மை ஏமாற்றலாம், ஆனால் தேவனுடைய வார்த்தை மிகுந்த நம்பிக்கைக்குரியது. அவருடைய எந்த வாக்குறுதியும் அழிந்து போகாது. (மாற்கு 13:31)

**4. தமது வார்த்தையின்படி செய்கிறவர்களிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்:** கர்த்தர் இயேசு சொன்னார், "என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான். நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்". வேதபுத்தகத்தில் தேவனுடைய எண்ணங்களும் கட்டளைகளும் குறித்துவைக்கப் பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் தாவீது அரசன் தேவனுடைய வார்த்தைகளை நேசிக்கவும் அதற்கு கீழ்ப்படியவும் செய்தான். அதனால் அவன் தேவனுடைய அன்பையும் ஆசீர்வாதத்தையும் நிறை வாகப் பெற்றுக்கொண்டான். தேவன் தம்முடைய சத்தியங்களை நாம் கேட்பதற்கும் அவற்றிற்குக் கீழ்ப்படிவதற்கும் நமக்கு உதவி செய்கிறார். அது நம்மை தேவனுக்குப் பிரியமானவர்களாக மாற்றும்.

**முடிவுரை:** கர்த்தருடைய வருகை சமீபமாக இருப்பதால் நாம் தேவனுடைய வார்த்தைகளைக் கற்றுக் கொள்ளவும் அதற்கேற்றபடி வாழவும் வேண்டும். வேதத்தின் வார்த்தைகளைப் பின்பற்றுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.